# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம்

---

*(1998, நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1998, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 17.75 தபாற் செலவு : ரூபா 3.75

## 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம்

[1998 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ. — ஓ 9/ 97

**சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தல், அத்தகைய துஷ்பிரயோகத்திற்குப் பலியானவர்களான சிறுவர்களுக்குப் பாதுகாப்பும் சிகிச்சையும் அளித்தல் என்பன பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைக்கும் நோக்கத்திற்கும்; அத்துடன் எல்லாவிதமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குமெதிரான நடவடிக்கையை ஒருங்கிணைப்பதற்கும் கண்காணிப்பதற்குமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

2. (1) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) *தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையைத் தாபித்தல்.*

(2) அதிகாரசபை (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

உ-ம 049752-2,100 (98/07)

அதிகாரசபையின் உறுப்பினர்கள்.

3. அதிகாரசபை, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டியவர்களான, (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பின்வரும் உறுப்பினர்கள் :–

(i) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆகக்குறைந்தது ஓர் ஆனால் இருவரை விஞ்சாத –

(அ) சிரேஷ்ட மனநோய் மருத்துவர்கள் ;

(ஆ) சிரேஷ்ட குழந்தை நோய் மருத்துவர்கள் ;

(இ) சட்ட வைத்தியத்துறையில் ஈடுபட்டிருக்கும் மருத்துவத்தொழிலர்கள் ;

(ஈ) சிரேஷ்ட உளவியலாளர்கள்.

(ii) நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் சிரேஷ்ட அரச வழக்குரைஞர் பதவிக்குக் குறையாத தரத்தைச் சேர்ந்த சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(iii) பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியின் தரத்துக்குக் குறையாத பொலிசுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(iv) சட்டம், சிறுவர் நலன், கல்வி என்பவற்றில் அல்லது வேறு ஏதேனும் தொடர்புள்ள துறையில் பரந்த அனுபவம், ஆற்றல் மற்றும் இனங்காணப்பெற்றவர்கள் எனச் சனாதிபதிக்குத் தோன்றுகின்ற ஆட்களிலிருந்து ஐந்து உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது,

(i) சிறுவர் நன்னடத்தை மற்றும் கவனிப்பு ஆணையாளர் ;

(ii) தொழில் ஆணையாளர் ; அத்துடன்

(iii) சிறுவரின் உரிமைகள் மீதான பட்டயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக அப்பட்டயத்தின் 40 ஆம் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட குழுவின் தவிசாளர்.

4. ஆளொருவர் –

உறுப்பினரொருவராக இருப்பதினின்று தகைமையிழத்தல்.

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது உறுப்பினராகவரின் ; அல்லது

(ஆ) அவர் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப்பின் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழியின் ; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் அவர் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றை அவர் அனுபவித்துக் கொண்டிருப்பாராயின் அல்லது அனுபவித்திருப்பாராயின் ; அல்லது

(உ) அதிகாரசபையால் அல்லது அதன் சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் அவர் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருப்பாராயின் அல்லது துய்ப்பவராயின் ; அல்லது

(ஊ) அதிகாரசபையின் உறுப்பினரொருவர் என்ற வகையில் அவரது பணிகள் அவரால் புரியப்படுவதனைப் பங்கப்படுத்தும் விதத்தில் பாதிக்கும் சாத்தியமுள்ளதாக ஏதேனும் நிதிசார்ந்த அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருப்பாராயின்,

அவர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதினின்று அல்லது தொடர்ந்திருப்பதினின்று தகைமையற்றவராதல் வேண்டும்.

உறுப்பினர்களை நீக்குதலும் அவர்கள் பதவியினின்று விலகுதலும்.

5. (1) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சனாதிபதிக்கு முகவரியிட்டெழுதும் கடிதத்தின்மூலம் அவரது பதவியினின்று விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது, அத்தகைய கடிதம் சனாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரை, சாட்டப்படும் காரணங்களுக்காக, பதவியிலிருந்து நீக்கலாம்.

(3) அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து நீக்கப்படுமிடத்து அவரது இடத்திற்குச் சனாதிபதி 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப் பினரொருவர் அவர் எந்த உறுப்பினரைப் பின்பற்றுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக் காலம்.

6. ஐந்தாம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும் என்பதுடன் அவர் மேலும் ஒரு தவணைக்கு மீள நியமனம் பெறுவதற்குத் தகுதியுடையவராலும் வேண்டும்.

உறுப்பினர்களின் வேதனம் அல்லது படி.

7. அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு அதிகாரசபையின் நிதியிலிருந்து அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய வேதனம் அல்லது படி செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் தவிசாளரும் பிரதித் தவிசாளரும்.

8. (1) சனாதிபதி, நிருவாகம், முகாமைத்துறை, சட்டம், சிறுவர் நலம்பேணல், கல்வி அல்லது வேறு சார்புடைய துறையில் அனுபவமும் ஆற்றலும் உடையவர் என நிரூபித் துள்ளவரான உறுப்பினர் ஒருவரை, அதிகாரசபையின் தவிசாளராக நியமிக்கலாம்.

(2) சனாதிபதி வேறோர் உறுப்பினரை அதிகாரசபையின் பிரதித் தவிசாளராக நியமிக்கலாம்.

(3) தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருப்பின் அவரது இடத்திற் செயலாற்று வதற்கெனச் சனாதிபதி வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(4) தவிசாளரும் பிரதித் தவிசாளரும் அதிகாரசபையில் பதவி வகிக்கும்பொழுது வேறு ஏதேனும் தன்மையில் செயலாற்றுதலோ அல்லது வேறேதேனும் பதவியை வகித்தலோ ஆகாது.

*அதிகாரசபையின் கூட்டங்கள்.*

9. (1) அதிகாரசபையின் தவிசாளர் சமுகமாயிருப்பின் அதிகாரசபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாதவிடத்து, பிரதித் தவிசாளர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளரும் பிரதித் தவிசாளரும் இல்லாதவிடத்து, சமுகமாயிருக்கும் உறுப்பினர்களிலொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஆறு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் அல்லது வேறு உறுப்பினர் அவரது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய அதிகாரசபையானது, அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலுமான நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

*செயல்கள் வெற்றிடமொன்றிருப்பதன் காரணமாகச் செல்லுபடியற்றவையாக மாட்டா.*

10. அதிகாரசபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், அதிகாரசபையில் ஏதேனும் வெற்றிடமுள்ளது என்ற காரணத்தினால் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுள்ளது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

அதிகாரசபையின் இலச்சினை.

11. (1) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையால் தீர்மானிக்கவும் வடிவமைக்கவும் படலாம் என்பதுடன், அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் திருத்தவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையின் அனுமதியுடனும் அத்துடன் தவிசாளரினதும் உறுப்பினரொருவரினதும் முன்னிலையிலுமன்றிச் சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாகச் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களினதும் ஆவணங்களினதும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

அதிகாரசபை அதன் தத்துவங்களை அமைச்சரின் பணிப்பின்கீழ் பிரயோகித்தல்.

12. அதிகாரசபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் பணிகளைப் புரிகையிலும் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலம் பேணல் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் அத்தகைய கொள்கைகளை அமுலாக்குதல் தொடர்பில் அமைச்சரால் வழங்கப்பட்ட ஏதேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தல்.

13. (1) அதிகாரசபையானது அதன் தத்துவங்கள் மற்றும் பணிகள் எவற்றையும் தவிசாளருக்கும் பிரதித் தவிசாளருக்கும் கையளிக்கலாம்.

(2) அதிகாரசபையின் எவையேனும் தத்துவங்களையும், பணிகளையும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்பெற்ற தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் அதிகாரசபையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களுக்கமைய பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

14. அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :— அதிகாரசபையின் பணிகள்.

(அ) சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தல், அத்தகைய துஷ்பிரயோகத்திற்குப் பலியானவர்களான சிறுவர்களுக்குப் பாதுகாப்பும் சிகிச்சையும் அளித்தல் என்பன பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல் ;

(ஆ) சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான வழிமுறைகள் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல் ;

(இ) அத்தகைய துஷ்பிரயோகத்துக்குப் பலியானவர்களின் பாதுகாப்புக்கான வழிவகைகள் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஈ) சிறுவர்கள் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு அவர்களுக்குள்ள உரிமை, சிறுவர்களைத் துஷ்பிரயோகஞ்செய்வதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பன பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல் ;

(உ) சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடைசெய்யும் நோக்கத்துக்காகவும், அத்தகைய துஷ்பிரயோகத்துக்குப் பலியானவர்களைப் பாதுகாத்து அவர்களின் நலன்களுக்குக் காப்பளிப்பதற்காகவும் இயைபான அமைச்சுகள், மாகாணசபைகள், உள்ளூரதிகாரசபைகள், மாவட்ட, பிரதேச செயலாளர்கள், பகிரங்க மற்றும் தனியார்துறை ஒழுங்கமைப்புகள் என்பவற்றுடன் ஆலோசனை நடாத்துதல் ; அத்துடன் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வழிகளையும் சிபார்சுசெய்தல் ;

(ஊ) சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான தேசிய கொள்கையைப் பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட, நிருவாக அல்லது வேறு சீர்திருத்தங்களை விதந்துரைத்தல் ;

(எ) எல்லாவிதமான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் ;

(ஏ) சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பான எல்லாப் புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்;

(ஐ) ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பில் மனிதாபிமான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், அத்தகைய பிள்ளைகளின் உள மற்றும் உடல்ரீதியான நலன் உட்பட அவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் ஒன்றிணைதல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை விதந்துரைத்தல் ;

(ஒ) குற்றவியல் புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு, அவசியமானவிடத்து, தோதான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ஓ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதலும் அத்துடன் அவசியமானவிடத்து, அத்தகைய முறைப்பாடுகளைத் தோதான அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதலும் ;

(ஔ) சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான பிரசாரங்களை ஒருங்கிணைப்பதற்கு மாகாணசபை மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள் என்பவற்றுக்கு ஆலோசனை வழங்குதலும், உதவிசெய்தலும் ;

(க) சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி ஒரு தேசிய தரவுகள் அட்டவணையைத் தயாரித்தலும் பேணுதலும் ;

(ங) சிறுவர்களுக்கு பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் வழங்குகின்ற எல்லாச் சமய மற்றும் தரும நிறுவனங்களை இயைபான அமைச்சுக்களினதும் ஏனைய அதிகாரிகளினதும் ஆலோசனையுடன் மேற்பார்வை செய்தலும், கண்காணித்தலும் ;

(ச) சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான ஆராய்ச்சியை நடாத்துதலும் ஊக்குவித்தலும் ஒன்றிணைத்தலும் ;

(ஞ) பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பிள்ளைகளின் நலன்களைப் பாதுகாத்தல் சம்பந்தமாகப் பொது மக்களுக்குத் தகவலும் கல்வியும் வழங்குதலும் ;

(த) சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்களைக் குறைக்கும் கருத்துடன் சுற்றுலாப் பயணத்துறையோடு தொடர்புபட்ட எல்லாப் பிரிவினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல் ;

(ந) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவற்றை ஒழுங்கமைத்து அவற்றிற்கு வசதியளித்தல் ;

(ட) எல்லாவிதமான சிறுவர் துஷ்பிரயோகங்களையும் கண்டுபிடித்தல் அத்துடன் தடைசெய்தல் என்பன தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு தகவல் பரிமாற்றம் செய்தல்.

15. அதிகாரசபை பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :— அதிகார சபையின் தத்துவங்கள்.

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், எடுத்தல் அல்லது குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்குவிடுதல், ஈடுவைத்தல், அடகுவைத்தல், விற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மேல் பிணைப் பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பு இல்லாமலோ பணங்களைக் கடனாகப் பெறுதல் ;

(இ) காசாகவோ அல்லது வேறுவகையிலோ, கொடைகள், மானியங்கள் அல்லது நன்கொடைகள் பெறுதல் ; அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவற்றைப் பிரயோகித்தல் ;

(ஈ) அதிகாரசபையின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ;

(உ) அதன் பணிகளைத் திறமையாகப் புரிவதற்காக உபகுழுக்களை நியமித்தல் அல்லது மாகாண மட்டத்தின் அலகுகளுடன் ஒருங்கிணைதல் ;

(ஊ) அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல் ;

(எ) அதன் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்புச் செயற்றிட்டத்தைத் தாபித்தல் அத்துடன் நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஏ) அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் இலங்கைக்குள்ளோ அல்லது வெளியிலோ செய்துகொள்ளுதல் ;

(ஐ) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ; அத்துடன்

(ஒ) பொதுவாக, அதிகாரசபையின் பணிகள் சரியாக நிறைவேற்றப்படுவதற்கு வசதிசெய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்தல்.

அலுவலர்களின் குழாம்.

**16.** (1) அலுவலர்களின் குழாம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "குழாம்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்).

(2) குழாம் பின்வரும் அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) நீதிமன்றச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவரும், நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளருக்குக் குறையாத தரத்திலுள்ள வருமான அலுவலர் ஒருவர் ;

(ஆ) கல்வி அமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரும், கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளருக்குக் குறையாத தரத்திலுள்ள வருமான அலுவலர் ஒருவர் ;

(இ) பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவரும், பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச்செயலாளருக்குக் குறையாத தரத்திலுள்ளவருமான அலுவலர் ஒருவர் ;

(ஈ) சுகாதார அமைச்சின் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவரும் சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவருக்குக் குறையாத தரத்திலுள்ளவருமான அலுவலர் ஒருவர் ;

(உ) சமூகசேவைகள் அமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்றவரும், சமூக சேவைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச்செயலாளர் தரத்துக்குக் குறையாத தரத் திலுள்ளவருமான அலுவலர் ஒருவர் ;

(ஊ) மாகாணசபைகள் அமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரும், மாகாண சபைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரின் தரத்துக்குக் குறையாத தரத்திலுள்ளவருமான அலுவலர் ஒருவர் ;

(எ) மகளிர் விவகார அமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரும், அத்தகைய மகளிர் விவகாரங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச்செயலாளர் தரத்துக்குக் குறையாத தரத் திலுள்ளவருமான அலுவலர் ஒருவர் ;

(ஏ) தொழில் அமைச்சின் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவரும், தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளருக்குக் குறையாத தரத்திலுள்ளவருமான அலுவலர் ஒருவர்;

(ஐ) உல்லாசப் பிரயாணத்துறை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாள ரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும் அத்தகைய அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளர் தரத்திற்குக் குறையாத தரத்திலுள்ள வருமான அலுவலர் ஒருவர் ;

(ஒ) பொதுசனத் தொடர்பு சாதனம் என்னும் விடயத் திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வரும் அத்தகைய் அமைச்சுக்கான சிரேஷ்ட உதவிச் செயலாளர் தரத்திற்குக் குறையாத தரத்திலுள்ள வருமான அலுவலர் ஒருவர்.

குழாம் அதிகார சபையின் முடிவு களை நடைமுறைப் படுத்துவதில் உதவி புரிதல்.

**17.** குழாத்தின் அலுவலர்கள் அதிகாரசபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் வருகை தருதல் வேண்டும் என்பதுடன் அதிகாரசபையின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரசபைக்கு உதவி புரிதலும் வேண்டும்.

அமைச்சருக்கு அதிகாரசபை ஆலோசனை வழங்குதல்.

**18.** அமைச்சர் அதிகாரசபையின் ஆலோசனையின் மேல், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கு அல்லது நியதிச்சட்ட நிறுவனத்துக்கு, அத்தகைய திணைக்களத்தை அல்லது நிறுவனத்தை, சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடைசெய்தல் தொடர்பான அத்தகைய பணிப்புரையில் குறித்துரைக்கப் படுகின்றவாறான அத்தகைய செயல்களை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்துகின்ற பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை வழங்கலாம்.

அதிகார சபையின் பணியாட்டொகுதி.

**19.** (1) அதிகாரசபை அதன் பணிகள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களும் சேவையாளர்களும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகார சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அந்த அலவலரினதும், பொது நிர்வாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத்திற்குச் சேவை செய்வதாக உடன்பட்டுக்கொண்டவரான எவரேனும் ஆளை, அதிகாரசபை ஊழியத்திலமர்த்துமிடத்து, அந்த ஆளினால் அதிகாரசபைக்குப் புரியப்பட்ட சேவைக் காலப்பகுதியெதுவும் அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் நிதியம்.

**20.** (1) அதிகாரசபையானது, (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்துக்குள் பின்வருவன செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) திரட்டிய நிதியத்திலிருந்து அதிகாரசபைக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்யப்படக்கூடியதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) அதன் தத்துவங்களையும் கடமைகளையும் அத்துடன் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் அத்துடன் புரிகையிலும் அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) கொடை, மானியக்கொடை, நன்கொடை என்ற வகையில் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெறும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும், புரிகையிலும் அத்துடன் நிறைவேற்றுகையிலும் அதிகாரசபையினால் உறப்படும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

குறித்த சில வரிகளிலிருந்து விலக்களித்தல்.

21. அதிகாரசபைக்குப் பணமாக அல்லது வேறுவகையில் செய்யப்படும் நன்கொடை ஒவ்வொன்றும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக் கங்களுக்காக, அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றிற் குப் பணமாக அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட நன்கொடை ஒன்றாகவிருத்தல் வேண்டுமெனக் கருதப்படல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

22. (1) பஞ்சாங்க ஆண்டே அதிகாரசபையின் நிதியாண்டாதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனக் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

இரகசியம் பேணல் பற்றிய வெளிப் படுத்துகை.

23. அதிகாரசபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அதிகார சபையின் எல்லா அலுவலர்களும் அத்துடன் சேவையாளர் களும், அவர்களது கடமைகளைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பு, அதிகாரசபையின் அலுவல்களுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் கண்டிப்பான இரகசியத்தைக் கடைப்பிடிக்கத் தம்மைப் பிணித்துக்கொள்ளும் வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகை மூலம், —

(அ) சட்ட நீதிமன்றமொன்றினால், அல்லது

(ஆ) அத்தகைய கருமங்கள் தொடர்புறுத்துகின்ற எவரே னும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது, அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் பொருட்டும்.

தவிர, அவரது கடமைகளையும் பணிகளையும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும், சிறுவர் துஷ்பிரயோகத்திற்குப் பலியான எவரினதும் ஆளடையாளம் தொடர்பாக அவரது அறிவுக் கெட்டக்கூடிய கருமம் எதனையும் வெளிப்படுத்தாது இருக்கத் தம்மைப் பிணித்துக் கொள்ளுதல் வேண்டும்.

24. (1) இச்சட்டத்தின் 14ஆம், 15ஆம் பிரிவுகளின் கீழான தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றுள் எதனையும் அதிகாரசபை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு இயலச் செய்யும் நோக்கத்துக்காக, அதிகாரசபை அல்லது அதன் சார்பில் அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்டவரான எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல் மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்தினுள்ளாக, அத்தகைய ஆளுக்குத் தெரிந்த அல்லது உடைமையிலுள்ளவாறான சிறுவர் தொடர்பிலான ஏதேனும் செயற்பாடு சம்பந்தமான அத்தகைய எல்லா விவரத் திரட்டுக்களையும் தகவல்களையும் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம். விபரத் திரட்டுகளும் தகவல்களும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றின் மூலம் ஏதேனும் விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆளெவரும் அத்தகைய ஆள் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய விவரத் திரட்டைச் செய்வதினின்று அல்லது அத்தகைய தகவலை வெளியிடுவதினின்றும் தடைசெய்யப்பட்டிருக்குமிடத்துத் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நேரத்தினுள் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) அதிகாரசபை அல்லது அதன் எவரேனும் உறுப்பினர் அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், சட்டநீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டபோது அல்லது அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காகத் தவிர, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொள்ளப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டுக்களை அல்லது தகவலை, எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்தலாகாது அல்லது அவற்றைப் பயன்படுத்துதலாகாது.

*அதிகார சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படல்.*

**25.** அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அதிகார சபையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டுமென்பது.*

**26.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்திற்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்கச் சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அசைவுள்ளதும் அசைவற்றதுமான இரு அரச ஆதனமும் அதிகார சபைக்குக் கிடைக்கத்தக்கதாகச் செய்தல்.*

**27.** (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் அதிகார சபையின் நோக்கத்திற்காகத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது எந்தவொரு நோக்கத்திற்காக முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆதனம் சிறப்பான மானியக் கொடையொன்றாக அல்லது குத்தகையாக ஆக்கப்படலாமோ, அந்தவொரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதிகாரசபைக்கான அத்தகைய ஆதனத்தின் ஒரு சிறப்பு மானியக் கொடைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனமெதுவும் அதிகாரசபையின் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகார சபைக்குக் கைமாற்றம் செய்து அதற்கு உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ், அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்றவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி ஏதேனும் அசைவுள்ள அரச ஆதனத்தைப் பாதிக்கும் கட்டளை எதுவும் அமைச்சரால் ஆக்கப்படுதலாகாது.

காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

**28.** (1) அதிகாரசபையின் குறிப்பான நோக்கம் எதற்கேனும் ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்டும் அத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அந்த நோக்கத்திற்கென சனாதிபதி அங்கீகரிக்குமிடத்தும், அந்த ஆதனமானது பொது நோக்கமொன்றிற்காகத் தேவைப் படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறே காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு அதிகாரசபைக்குக் கைமாற்றப்படுதலும் வேண்டும்.

(2) காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொண்டமைக்காக அதிகாரசபைக்குச் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் பணத்தொகையானது அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகார சபையின் பணிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

**29.** (1) வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும்,

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அதிகார சபைக்கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட தாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர்களுக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக

இருத்தல் ஆகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப் பின்மீது ஆளெவரினாலும் செய்யப்பட்டதான அல்லது செய் யப்பட்டதாகக் கொள்ளப்பட்டதான ஏதேனும் செயல் தொடர்பாக அவருக்கெதிராகத் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஏதேனும் ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண் ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால், அதி காரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவருக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப் படலாகாது.

30. அதிகாரசபைக்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் வழக்கில் அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக் கெதிராகவோ அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளருக்கெதிராகவோ அல்லது அவர்களது ஆதனத்திற்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

அமைச்சருக்குத் தகவலைக் கொடுத்துதவுதல்.

31. அமைச்சர், காலத்துக்குக்காலம், விவரத் திரட்டுக்களை, கணக்குகளை அத்துடன் அதிகாரசபையின் வேலை தொடர்பான வேறு தகவலை, அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குக் கொடுத்துதவுமாறு அதிகாரசபையைப் பணிக்கலாம் என்பதுடன் அதிகார சபையானது அத்தகைய ஒவ்வொரு பணிப்புரையையும் கொண்டு நடாத்துதலும் வேண்டும்.

ஆண்டறிக்கை.

32. அதிகார சபையானது ஆண்டறிக்கை எவ்வாண்டு தொடர்பிலானதோ அவ்வாண்டில் அதன் எல்லாச் செயற் பாடுகளையும் பற்றிய ஆண்டறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அமைச்சர், அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கச் செய்தலும் வேண்டும். அதிகாரசபை, அவ்வாறு செய்தல் அவசியமான தென அது கருதும்போது, அதனால் பரிசீலனை செய்யப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட கருமத்தையும் அல்லது எவையேனும் குறிப்பிட்ட கருமங்களையும் அவை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பற்றி காலாகாலத்திற்குரிய அல்லது விசேட அறிக்கைகளை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏதேனும் வளவுகளுக்குள் நுழைந்து பரிசோதிப்பதற்கு எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளிப் பதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவங்கள்.

33. அதிகாரசபையானது எவையேனும் வளவுகளில் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறுகின்றதெனவும் தேடுதல் பிடியாணை யொன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல் அத்தகைய சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய புலனாய்வை பங்கப்படுத்தக் கூடும் எனவும் நம்புவதற்கு அதற்கு நியாயமிருக்குமிடத்து, அத்தகைய வளவுகளுக்குள் நுழைந்து தேடுதல் நடாத்துவதற்கு அதிகார சபையின் அலுவலரொருவருக்கு எழுத்தில் அதிகார மளிக்கலாம். அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் இதனகத்துப்பின்னர் "அதிகாரம் பெற்ற அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

சோதனையிடுவதற் கும் தேடுவதற்கும் உள்ள தத்துவம்.

34. (1) அதிகாரம் பெற்ற அலுவலர் எவரும் —

(அ) சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவாறான ஏதேனும் நிறுவனத்தின் ஏதேனும் வளவுகளுக்குள் சென்று சோதனையிடலாம் ;

(ஆ) சிறுவர்கள் —

(i) சிறுவர் துஷ்பிரயோக நோக்கத்திற்காக ;

(ii) வேறு ஏதேனும் சட்டவிரோத நோக்கத்திற்காக ;

(iii) சட்டவிரோத மகவேற்புக்காக ;

வைத்திருக்கப்பட்டுள்ளார்கள் என நம்புவதற்குக் காரணமிருக்கின்றதான ஏதேனும் வளவுகளுக்குள் சென்று சோதனையிடலாம் ;

(இ) அத்தகைய வைத்தியசாலையில் அல்லது மகப்பேற்று நிலையங்களில் சட்டவிரோத மகவேற்புகள் இடம்பெறுகின்றன என நம்புவதற்குக் காரணமிருக்கின்றதான ஏதேனும் வைத்தியசாலைக்குள் அல்லது மகப்பேற்று நிலையத்திற்குள் சென்று சோதனையிடலாம் ;

(ஈ) அத்தகைய நிறுவனத்தினால் பேணப்படும் எவையேனும் புத்தகங்கள், இடாப்புகள் அல்லது பதிவேடுகள் என்பவற்றைப் பரிசோதிக்கலாம்; அவற்றிலிருந்து பொழிப்புக்களை அல்லது பிரதிகளை எடுக்கலாம் ;

(உ) அத்தகைய வளவுகளில் கொண்டு நடாத்தப்படும் நடவடிக்கைகளைக் கண்டறியும் நோக்கத்திற்காகவும் சிறுவர்கள் தொடர்பிலான ஏதேனும் சட்டத்தின் மீறுகை எதுவும் உண்டா எனக் கண்டறியும் நோக்கத்திற்காகவும் அத்தகைய ஏதேனும் வளவுகளில் எவரேனும் ஆளைக் கேள்விக்குட்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை ஓர் அலுவலர் பிரயோகிக்கையில் அத்தகைய அலுவலரை முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது தடைசெய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவிற்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பொருட்களைக் கைப்பற்றுவதற்கான தத்துவம்.

35. (1) அதிகாரம் பெற்ற அலுவலரெவரும், ஏதேனும் சட்டத்தின்கீழ் சிறுவர் தொடர்பிலான ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்படுகின்றது என நம்புவதற்குக் காரணத்தைக் கொண்டிருந்தால் —

(அ) எந்தப் பொருள் வாயிலாக அல்லது தொடர்பாகத் தவறு புரியப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளதோ அல்லது அத்தவறு புரியப்படுவது தொடர்பில் எந்தப் பொருள் பயன்படுத்தப்பட்டதோ அந்தப் பொருள் எதனையும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய காலத்திற்கு ;

(ஆ) அவரது அபிப்பிராயத்தில், அத்தகைய ஏதேனும் தவறொன்றிற்காக, எவரேனும் ஆளின் குற்ற வழக்கு தொடர்பில் சான்றாக அமையக்கூடிய ஏதேனும் புத்தகத்தை, இடாப்பினை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை அல்லது ஏதேனும் இயந்திரவியல் அல்லது இலத்திரனியல் உபாயத்தை,

கைப்பற்றித் தடுத்து வைக்கலாம்.

(2) எவரேனும் அதிகாரம் பெற்ற அலுவலர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பொருளைக் கைப்பற்றுகின்றவிடத்து, அத்தகைய பொருள் கொடுத்துத் தீர்க்கப்படும்வரை அதிகார சபையின் கட்டுக்காவலிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கப் படுதல் வேண்டும்.

அதிகாரம் பெற்ற அலுவலர்கள் சமாதான அலுவலர்களாகக் கருதப்படல்.

36. பிரிவு 33 இன் கீழ் நியமிக்கப்பட்ட எல்லா அதிகாரம் பெற்ற அலுவலர்களும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்திற்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும், சமாதான அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும்.

தவறுகள்.

37. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்க ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்து தவத் தவறுகின்ற ;

(ஆ) அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் தெரிந்து கொண்டே ஏதேனும் பிழையான கூற்றைச் செய்கின்ற ;

(இ) அதிகாரசபையின் ஓர் உறுப்பினராக, அலுவலராக அல்லது சேவையாளராக அல்லது ஆலோசனைச் சபையின் உறுப்பினர் ஒருவராக இருந்து கொண்டு இச்சட்டத்தின்கீழ் அல்லது தத்துவங்களைப் பிரயோகித்ததுடன் அல்லது அவரது பணிகளைப் புரிந்ததுடன் தொடர்புபட்டு அல்லது அவரால் பெறப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகத்திற்குப் பலியானவர்களின் ஆளடையாளம் தொடர்பில் ஏதேனும் கருமத்தை வெளிப்படுத்தும் பயனுடைய ஏதேனும் தகவலை, எந்த நோக்கத்திற்காக இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தகவலை வெளிப்படுத்தும்படி அந்த ஆள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்த நோக்கம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்திற்காக எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துகின்ற ;

(ஈ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற,

ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) எத்தவறுக்காக இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டினால் தண்டனை எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அத்தவறை இச்சட்டத்தின்கீழ் புரிகின்ற ஆள் ஒவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள்குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது அலுவலரும் ;

(ஆ) அவ்வாட்கள்குழு குழுமம் ஒன்றாயின் அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் அத்தகைய குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறானது தமது அறிவில்லாமலேயே புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான எல்லா விழிப்புக் கவனத்தையும் பயன்படுத்தினார் என எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(4) ஆலோசனைச் சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அதிகாரசபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்டவரான அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், சிறுவர் தொடர்பிலான சட்டங்களின்கீழான தவறுகள் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்திற்காக 1979ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 136 ஆம் பிரிவின் கருத்தெல் லைக்குட்படப் பகிரங்க அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

38. (1) அமைச்சரானவர், எக்கருமம் தொடர்பில் இச்சட்டத் தினால் விதித்துரைக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப் படுகின்றதோ அல்லது எது தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தில் அதிகாரமளிக்கப் படுகின்றதோ அது தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர், வசதியானளவு விரைவாக பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்கெனக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியன்று அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் நீக்கப்பட்டதாகக் கருதப்பட்டதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

39. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

40. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி — பொருள்கோடல்.

"தவிசாளர்" என்பது, 8 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் தவிசாளர் என்று பொருள்படும் ;

"சிறுவர்" என்பது பதினெட்டு வயதிற்குக் குறைந்த ஆள் ஒருவர் என்று பொருள்படும் ;

"சிறுவர் துஷ்பிரயோகம்" என்பது பின்வரும் எவையேனும் ஏற்பாடுகளின் மீறுகை ஒன்றாக அமையக்கூடியதான, சிறுவர் தொடர்பிலான ஏதேனும் செயல் அல்லது விட்டுவிடுகை என்று பொருள்படும் :—

(அ) தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 286அ, 288, 288அ, 288ஆ, 308அ, 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ அல்லது 365ஆ ;

(ஆ) பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் பிள்ளைகளைத் தொழிலுக்கமர்த்தல் சட்டம் ;

(இ) பிள்ளைகள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் ; அல்லது

(ஈ) கல்விக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டாயக் கல்வி தொடர்பிலான ஒழுங்குவிதி என்பதுடன்

பிள்ளையின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதான அல்லது அத்தகைய பிள்ளைக்கு உடல் ரீதியாக அல்லது உளரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதான ஆயுதப் போராட்டத்தில் பிள்ளையொன்று ஈடுபடுவதையும் உள்ளடக்குகிறது ;

"பிரதித் தவிசாளர்" என்பது, 8 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப் பட்ட அதிகாரசபையின் பிரதித்தவிசாளர் என்று பொருள்படும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகர்சபை, நகரசபை அல்லது பிரதேச சபை எனப் பொருள் படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களோடு புரியப்படும் பணிகளோடு அத்துடன் நிறைவேற்றப்படும் கடமை களோடு நேரொத்த அல்லது அவற்றைப் போன்ற தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறை வேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்.

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபை ஒன்று என்று பொருள்படும் ;

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.